73662
Mercantile

# மாவலி

ஆண்டு மலர்



டிசெம்பர் 1974

தொழிலாளர் தேசிய சங்க வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சலி செய்ய வாரீர்

தொழிற் சங்கம் தொழிலாளரின் சொத்தாக இருக்க வேண்டும் என்ற உயர்ந்த இலட்சியத்தோடு 1942 முதல் தொழிற் சங்கத் துறையில் வீ. கே. உழைத்து வந்தார். தன்னையும் தொழிற் சங்கப் பணிக்கே அர்ப்பணித்து தனது இல்லற வாழ்க்கையையும் துறந்து பிரம்மச்சாரியாக வாழ்ந்தவர். அவர் எப்போதும் சிந்திப்பது நசுக்கப்பட்டு, ஒதுக்கப்பட்டு, புழுங்கும் தோட்டத் தொழிலாளியைப் பற்றியேதான்.

தொழிற் சங்கத்தில் அங்கத்தவர் குரலுக்கு மதிப்பும் மரியாதையும் இருக்க வேண்டும். மத்தியக் கமிட்டியின் முடிவு அங்கத்தவர்களின் கருத்தையும், எண்ணத்தையும் பிரதிபலிக்கும் வகையில் இருக்க வேண்டும் என எப்போதும் வலியுறுத்தினர். கூட்டங்களில் தொழிலாளர்களை அதிகம் பேசவிட்டு, கேள்வி கேட்கவிட்டு, பதிலும் விளக்கமும் கூறுவார். தனது சமூகத்தையும் அதில் ஏற்பட்டுள்ள குறைபாட்டையும், சுட்டிக்காட்டி பேசுவதின் மூலம் மற்றவர்களை சிந்திக்க வைத்தார்.

சம்பள உயர்வின் மூலம்தான் தோட்டத் தொழிலாளரின் வறுமையை ஓட்டமுடியும், அவர்கள் கடன்காரர்களாக இருப்பதை மாற்ற வாராவாரம் தங்களுக்கு தேவையானதை குறைந்த விலையில் பெறவாரச் சம்பளம் கொடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி வந்தார். அதுவே பின் தொழிற்சங்கங்களின் மாதச் சம்பளக் கோரிக்கையாய் மாறியது. இந்த மாதச் சம்பளம் குறைந்த பட்ச சம்பளச் சட்டத்தை தளமாக வைத்து திட்டம் வகுத்து, நாடு பூராவும் பிரச்சாரம் ஏற்படும் வகையில் அதன் முக்கியத்துவத்தை தொளிலாளர்கள் உணரச் செய்தார்.

தொழில் நீதி மன்றத்திலும் சரி, தொழில் காரியாலயத்திலும் சரி, நேரடி பேச்சு வார்த்தையிலும் சரி, தொழிலாளர் பிரதிநிதியாக அமர்ந்து பேசும் போது முதலாளி - தொழிலாளி இரு தரப்பார் குறைகளை எடுத்துக் காட்டி, பிரச்சினைக்கு தீர்வு காணுவதின் மூலம் முதலாளிமார்களின் நல்லெண்ணத்தையும் பெற்றார். தன் மீது குறை இருந்தால் மற்றவர்கள் சுட்டிக் காட்டவேண்டும் என்ற ஆவலுடையவர்.

பிரயாணத்தின் போது, பஸ்களிலும் ரெயில்களிலும் நடக்கும் சம்பாசனையை கேட்பதோடு தானும் கலந்துகொண்டு விளக்கம் கொடுப்பார். இவர் பிரயாணத்தின் போது பல குறைகளை கண்டு தீர்வு காண விழைவதுண்டு. தொழிலாளருடன்

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்)

## "நம்ம தோட்டம்"

இலங்கையில் 597,000 ஏக்கர் நிலத்தில், குறிப்பாக மலைநாட்டில் தேயிலை பயிரிடப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| 500 ஏக்கர்களுக்கு மேற்பட்ட தோட்டங்கள் | | 312 |
| 10 ஏக்கர் முதல் 100 ஏக்கர்வரை உள்ள தோட்டங்கள் | | 2,500 |
| 10 முதல் 500 ஏக்கர் வரை உள்ள ,, | | 530 |
| இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் தேயிலை | இரு. | 500.000,000 |
| உள்நாட்டு உபயோகம் | இரு. | 40,000,000 |
| ஒரு ஏக்கரின் சராசரி விளைச்சல் | இரு. | 833 |
| பெரிய கம்பெனித் தோட்டங்களில் சராசரி விளைச்சல் | இரு. | 3000 முதல் 4000 |

★

## தேனீர்

இருதய நோய் (மாரடைப்பு) இரத்த அழுத்தம் இவைகளைத் தீர்ப்பதற்கு தேனீர் குடிக்கவேண்டும் என்று அமெரிக்க, ஜப்பானிய ஆராய்ச்சியாளர்கள் தீர்ப்பு வழங்கி உள்ளார்கள்.

- உடம்பு குளிரும் போது சூடாக தேனீர் சாப்பிட வேண்டும்.
- அதிக உஸ்ணத்தை தவிர்ப்பதற்கு தேனீர் சாப்பிட வேண்டும்.
- மனச் சோர்வை தீர்ப்பதற்கு தேனீர் சாப்பிட வேண்டும்.
- மனம் கொந்தளிக்கும்போது, அதை அமைதிப்படுத்த தேனீர் சாப்பிட வேண்டும்.

இந்தத் தீர்ப்பை வழங்கியவர் இங்கிலாந்தின் முன்னாள் பிரதமர் – கிலாட்ஸ்டன்.

★

தேயிலை உற்பத்தி செய்யும் தொழிலாளிக்கு நல்ல ரகத் தேயிலை தோட்டங்களில் கொடுப்பதில்லை. கழிவுபட்ட தூசியையே விலை கொடுத்து வாங்க வேண்டும்.

கொழும்பில் தேயிலை சுத்தம் செய்யும் நிறுவனங்களில் வேலை செய்யும் பெண் தொழிலாளிக்கு மாதச் சம்பளம் 200/- தோட்டப் பெண் தொழிலாளிக்கு புதுச் சட்டப்படி 18 நாட்களுக்கு 66/75.

★

## குறுக்கே வந்த நாடு

1492 அக்டோபர் 12ம் திகதி கிரிஸ்டோபஸ் கொலம்பஸ் இந்தியாவைத் தேடிப்போகும்போது அமெரிக்கா குறுக்கே வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலம்பஸின் பிரயாணம் துவங்கியது வெள்ளிக்கிழமை (3-8-1492). அமெரிக்காவை கண்டு பிடித்தது வெள்ளிக்கிழமை (12-10-1492). அமெரிக்க மண்ணில் இறங்கியதும் வெள்ளிக்கிழமை (22-11-1493).

★

## தடித்த வாரப்பத்திரிக்கை

உலகிலேயே பிரபலமான தினசரிப் பத்திரிகை நியூயார்க் டைம்ஸ். அதன் ஞாயிறு பதிப்பு சுமார் நூறு பக்கங்களைக் கொண்டுள்ளது. ஆனால் 1971ம் ஆண்டு அக்டோபர் 10ம் திகதி வெளியான ஞாயிறு பதிப்பு ஒரு ரிக்கார்டை ஏற்படுத்தியுள்ளது. 15 பகுதிகளாக வந்த இதழ் மொத்தம் 915 பக்கங்கள். இதன் விலை 50 சென்ட்கள் (சுமார் நான்கு ரூபாய்)

★

## ஐந்து வயதில் அரியணை

பதினான்காம் லூயி பிரான்ஸ் தேசத்தின் மன்னராக பதவி ஏற்றபோது அவருக்கு வயது ஐந்துதான். 1715 வரை - 72 ஆண்டுகள் அரசராக இருந்தார். இவர் காலமாவதற்கு முன்பே பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் இறந்து விட்டனர். ஆகவே இவருக்குப் பின் கொள்ளுப் பேரன் பதினைந்தாம் லூயி அரச பதவி ஏற்றான். அப்போது அவனுக்கும் வயது ஐந்துதான்.

## எண் ஞானம்

எண் கணித முறைப்படி மாவலியில் எதிர் காலப் பலன்கள் வெளிவரும்

கணித முறைப்படி தங்களின் பலன்களை அறிய விரும்பும் அன்பர்கள் கீழே தரப்பட்டுள்ள கூப்பனை தபால் அட்டை அல்லது கடித உறையில் ஒட்டி அனுப்புதல் வேண்டும். பிறந்த திகதி, மாதம், ஆண்டு, நேரம் ஆகியவற்றை தெளிவாக எழுதி அனுப்புதல் வேண்டும்.

எண் ஞானம்
மாவலி
த. பெ. எண் 13
கொழும்பு 3



# மலையக மக்களுக்கு மனம் நிறைந்த தீபாவளி என்றைக்கு ?

வி. கே. வெள்ளையன்

( அமரர் வி. கே. வெள்ளையன் அவர்கள் இன்று நடப்பதை தீர்க்கதரிசனமாக 7.11.69-லேயே கூறிவிட்டார். மலையக மக்களுக்கு என்றைக்குத்தான் மனம் நிறைந்த தீபாவளி வரும் என்பதை தெளிவாக இக்கட்டுரை காட்டுகிறது. இக்கட்டுரையில் எப்படி சம்பளம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது, அதை அமுல் நடத்துவது யார் என்பதையெல்லாம் தெளிவுபடுத்தியுள்ளார்.) —ஆ-ர்.

துன்பம் நிறைந்த இருள் மறைந்து, இன்பம் நிறைந்த ஒளி மயமே தீப அலங்காரம் நிறைந்த தீபாவளித் திருநாள்! மலையக மக்களின் தனிப்பெரும் பெருநாளாகவும் புதிய உடையுடன் நல்ல உணவுடன் விருந்தினர்களோடும் விருந்துகளோடும் நாடகம், சங்கீதத்தோடும், கேளிக்கை கூத்தோடும் மகிழ்ச்சியூட்டும் மக்கள் தினமாகத் தீபாவளித் திருநாள் கொண்டாடப் படுகின்றது. தீபாவளியும் தொழிலாளர்களின் வருமானத்தின் அடிப்படையிலேயே கொண்டாடப்படும். வருமானம் உயர்ந்தால் மகிழ்ச்சி உயரும். வருமானம் குறைந்தால் மகிழ்ச்சியும் குறையும். தொழிலாளர்களின் வருமானமே அவர்களின் வாழ்க்கையின் அளவுகோல்!

1865-ல் கொண்டு வரப்பட்ட தொழில் ஒப்பந்தச் சட்டத்திலும், 1889-ல் இயற்றப்பட்ட தோட்டத் தொழிலாளர் (இந்தியர்) சட்டத்திலும் 1927-ல் இயற்றப்பட்ட குறைந்த சம்பளம் (இந்தியத் தொழிலாளர்) சட்டத்திலும், மலையக மக்களின் வருமானம் வரையறுக்கப்பட்டு உள்ளது.

* வேலை செய்த நாட்களுக்கு கூலி கொடுக்க வேண்டும்.

* வாரத்திற்கு 6 நாட்களுக்கு மேல் வேலை கொடுக்கலாகாது.

* வேலை செய்யத் தகுதியுடையவர்கள் வேலை செய்ய விரும்பினால் வேலை கொடுக்க வேண்டும்.

* வேலையில்லாத நாட்களுக்குச் சம்பளம் கொடுக்க வேண்டும்.

* வேலை நாட்களுக்குக் குறைந்த பட்சக் கூலி கொடுக்க வேண்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* மாத வருமானத்தை அடுத்த மாதம் 10-ம் திகதிக்கு முன் கொடுத்துவிட வேண்டும்.

* வேலை நேரம் 9 மணியாக இருக்க வேண்டும். ஆனால் பகல் உணவுக்கு ஒரு மணி நேரத்திற்கு குறையாமல் ஓய்வு கொடுக்க வேண்டும்.

* 9 மணி நேரத்திற்கு மேல் வேலை செய்தால் அதற்கு நேர அடிப்படையில் வேறு கூலி கொடுக்க வேண்டும்.

* சம்பளம் கொடுக்கா விட்டால் நீதி மன்றத்திலே வழக்குத் தாக்கல் செய்து சம்பளத்தைப் பெற வேண்டும்.

* சட்டங்களை அமுல் நடத்தத் தொழில் இலாகா அதிகாரம் பெற்றுள்ளது.

* குறைந்த பட்சக் கூலியை நிர்ணயிக்கச் சம்பள நிர்ணய சபை நியமிக்கப் பட்டிருக்கிறது.

வளர்ச்சி பெறும் நாடுகளில் உற்பத்தியைப் பெருக்கச் சம்பளக் கொள்கைகள் வளர்ந்து வருகின்றன. தொழிலாளர்களின் நலனே தொழில் வளத்தின் நலன் என்பதைக் கண்ணாரக் காணுகின்றனர். ஊதிய உயர்வால் உற்பத்தி உயர்கின்றது என்ற உண்மையை உணர்ந்து உழைப்பவர்களின் ஊதியத்தை பெருக்கி ஒத்துழைப்பைப் பெறுகின்றனர்.

ஆனால் இலங்கையிலோ சம்பளக் கொள்கை யென்பது என்னவென்று தெரியாது. சம்பளக் கொள்கைகளைப் பற்றி பேசுபவர்களும் இருப்பதாகத் தெரியவில்லை. தொழிலாளர் போராட்ட பலத்தால் தொழிற் சங்கப் பலத்தால் சம்பள உயர்வைத் தொழிலாளர் பெறுகின்றனர். போராட்ட மில்லாத பகுதிகளில் போதிய சம்பளமில்லை, முதலாளிகளின் தயவால் ஆட்சியாளர்களின் ஆதரவால் தொழிலாளர் வருமானம் பெருகினால் உண்டு. இல்லாவிட்டால் இல்லை. உழைப்பவர்கள் உறிஞ்சப்படுகிறார்கள். குறைந்த சம்பளத்தினால் பிரச்சினைகள் வளர்கின்றன. உற்பத்தி குறைகின்றன. சம்பளக் குறையைத் தீர்க்கச் சட்டங்கள் வருவதில்லை. சம்பளம் பெருகுவதைத் தொழிலாளர் கையில் ஒப்படைக்கப்பட்டுவிட்டது. தொழிற் சங்கங்கள் அந்தக் கடமையை ஏற்றுக்கொண்டுள்ளன. பலமுள்ள தொழிற் சங்கம் தொழிலாளர் வருமானத்தைப் பெருக்குவதில் கண்ணுங் கருத்துமாக இருக்கின்றது. வருமானம் உயர்ந்த தொழில்களில் பிரச்சினைகள் குறைந்து விட்டன. குறைந்த சம்பளம் நிறைந்த தொழில்களே இன்று கூடிவிட்டன. தொழிலாளர் பிரச்சினைகள் கூடி வளர்ந்து கொண்டிருக்கின்றன. பிரச்சனைகளைத் தீர்க்கத் தண்டனைகள் வளர்கின்றன. குறைந்த சம்பளப் பிரச்சினை இன்று பல்வேறு பிரச்சினைகளை எழுப்புகின்றது. தண்டனைகளால் பிரச்சினைகளைக் குறைத்துவிட முயல்கின்றனர். தண்டனையால் உற்பத்தியை உயர்த்திவிடலாம் என்று கனவு காணுகின்றனர். தண்டனைகள் புதிய புதிய பிரச்சினைகளை உற்பத்தி செய்கின்றன. தொழிலாளர் மத்தியிலே விரோதமும் குரோதமும் வளர்கின்றன. போராட்டங்களும் வேலை நிறுத்தங்களும் போட்டி போட்டுக் கொண்டு வளர்கின்றன.

உற்பத்தியைப் பெருக்கப் பிரச்சினைகளைத் தீர்க்கப் புரட்சிகரமான புதுப் புதுச் சட்டங்கள் உருவாக்கப் படுகின்றன. தொழில் இலாகாவும் தொழில் மன்றங்களும் வளர்கின்றன. தொழில் பிரச்சினைகளும் தொழிலாளர் பிரச்சினைகளும் வளர்ந்துகொண்டே போகின்றன. தொழில் உற்பத்தி பெருகத் தொழிலாளர் உழைப்பு உயர வேண்டும்; தொழிலாளர் உழைப்பு உயர தொழிலாளர் ஊதியம் உயர வேண்டும் என்பதை உணர மறுப்பதும் அதை மூடி மறைப்பதும் நம் நாட்டில் வளர்ந்து வரும் சதியாகும்.



உணவு உற்பத்தியைப் பெருக்க நியாய விலை கொடுக்க வேண்டுமென விலை உயர்த்தப்பட்டது, நியாய விலை உயர்வால் உணவு உற்பத்தியைப் பெருக்கும் உணர்ச்சியைப் பெற்று விவசாயிகள் விறுவிறுப்பாக உழைக்கின்றனர். உணவு உற்பத்தி வளர்ந்து கொண்டே வருகின்றது.

மலையக மக்களின் வருமானப் பிரச்சினை ஒதுக்கப்பட்டு விட்டது. வருமானம் குறையக் குறையப் பிரச்சினைகள் வளர்ந்து படர்ந்து விட்டன. தோட்டத் தொழிலாளர்களின் சம்பளச் சட்டங்கள் பழங் காலக் கொள்கையின் அடிப்படையில் இயற்றப்பட்ட பண்டைக் காலச் சட்டங்களே இன்றும் இயங்குகின்றன. நாகரிக காலத்தில் தொழில் வளர்ச்சி பெற்ற நாடுகளில் வாரச் சம்பளம், மாதச் சம்பளம் என்று நிச்சயமான, நிரந்தரம் பெற்ற சம்பளம் கொடுக்கும் போது மலையக மக்கள் வாங்குவது நாள் சம்பளம். வேலை செய்த நாட்களுக்கு மாத்திரமே சம்பளம். வேலை கொடுக்காத நாட்களுக்கு சம்பளம் இல்லை. வேலையில்லாத நாட்களுக்கு வேலை செய்ய விரும்பி வேலை கேட்டால் சம்பளம் கொடுக்க வேண்டும் என்பதே சட்டம். ஆனால் வேலையில்லாத நாட்களில் வேலை கேட்டால் அது பெருங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றம். வேலையில்லாத நாட்களில் சம்பளம் கேட்டால் குழப்பக்காரன் என்ற பட்டம் சம்பளக் கிளர்ச்சி செய்பவர்களை வெளியேற்ற உடனே நடைபெறும் ஒரு சதித்திட்டம்.

வேலை செய்த நாட்களுக்கு மாத்திரமே சம்பளம் என்பது ஒவ்வொரு நாளும் தொழிலாளர்களை வேலை செய்யத் தூண்டும் கொள்கையாகும். வேலை கொடுக்காமலிருக்கும்பொழுது வேலையில்லை என்று சொல்லும்போது வேலைக்கு ஒழுங்காக போகத் தூண்டும் கொள்கை தேவையற்றது. ஆகவே நாள் சம்பளம் இன்று பிரயோசனமற்றதும் தொழிலாளர்கட்குப் பாதகம் விளைவிப்பதும் ஆகும். தொழிலாளர் வாழ்க்கைக்குத் துரோகம் செய்வதாகும். உற்பத்தி உயர்வுக்கு உலை வைப்பதாகும்.

குறைந்த பட்சச் சம்பளம் அடிமைக் காலத்திற்கு அடுத்துப் பிறந்த சம்பளக்கொள்கை ஆகும். நியாயமான சம்பளம், உயர்ந்த சம்பளமென்ற கொள்கைகளும் உழைப்புக்கேற்ற சம்பளம், தேவைக்கேற்ற சம்பளம் என்ற நியதிகளும் மாறி மாறி வளர்ந்து வருகின்றன. ஆனால் மலையக மக்களுக்கு குறைந்தபட்ச சம்பளமே அவர்களின் சம்பளச் சட்டமாகும். குறைந்தபட்ச சம்பளம் கிடைப்பதும் இன்று குதிரைக் கொம்பாகிவிட்டது. குறைந்த பட்ச சம்பளமே தோட்டத் தொழிலாளர்கட்கு இன்று கிடைக்கின்றது. குறைந்த பட்ச சம்பளமானது நியமிக்கப்பட்ட சம்பளத்தைவிட குறைத்துக் கொடுக்கலாகாது என்பதும் வாரத்திற்கு ஒரு நாள் வேலையில்லாமல் கூலியில்லாமல் 26 நாட்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளமாகும். அதுவே குறைந்த பட்ச சம்பளச் சட்டத்தின் கருத்தாகும். ஆகவே நாள் சம்பளம் ரூ. 3.01 இருப்பதால், மொத்த வருமானமாக 26 நாள் சம்பளம் ரூ. 78.26 சதமாக இருக்க வேண்டும் என்பதே குறைந்த பட்ச சம்பளச் சட்டத்தின் அர்த்தமாகும். மாத ருபானம் ரூ 78.26 சதத்திற்குக் குறைந்தால் அது குறைந்த பட்ச சம்பளக் கொள்கைக்கு மாறானதும் சம்பளச் சட்டத்திற்கு விரோதமானதும் ஆகும். வேலைக்குப் போகாமல் இருந்தால் சம்பளம் இல்லை என்பது சட்டத்தில் தெளிவாகக் காணப்படுகிறது. சுகமில்லாத நாட்களுக்கு தோட்டக் கணக்கில் உணவும் மருந்தும் தொழிலாளர்கட்கு கொடுக்க வேண்டும் என சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறைந்தபட்ச சம்பளக் கொள்கையானது தொழிலாளர்களின் வருமானம் ஏழ்மையின் எல்லையைத் தாண்டலாகாது. தொழிலாளர்கள் ஏழைகளாக மாறாமல் வறுமையில் வழுக்கி வீழாமல் இருக்கவேண்டும். பட்டினி கிடக்காமல், கடன் வாங்காமல் போதுமான உழைப்பைக் கொடுக்க வேலை நாட்களில் வேலை செய்யப் போதுமானதாக அக்காலத்தில் அமைக்கப்பட்டது. அதிகமான வசதி இருந்தால் அசட்டையாக இருந்துவிடுவார்கள். வசதிகள் குறைவாக இருந்தால் சம்பளத்தைப் பெருக்க அடிக்கடி வேலையைத் தேடி வருவார்கள் என்ற எண்ணம் அக்காலத்தில் குடிகொண்டு இருந்தது. ஆறு நாள் வேலை செய்யவும் உதவும் என்று உணர்ந்தனர். அக்காலத்தில் குறைந்தபட்ச சம்பளமே முதலாளிகட்கு உதவியாகவும் தொழிலாளர்கட்கு ஆதரவாகவும் அமைந்துள்ளதாக எண்ணினர். எங்கும் இக்கொள்கை இப்போது மறைந்துவிட்டது. ஆனால் மலையகத்தில் நிலைத்துவிட்டது.

குறைந்த பட்சச் சம்பளத்தோடு அதிக உழைப்பைப் பெற ''கண்ராக்ட்'' வேலைகள் கொடுத்து அதற்கு வேறு கூலி கொடுக்கப்பட்டது. உற்பத்தியை பெருக்க ''கைகாஸ்'' வேலை கொடுத்து அதிகம் உழைத்தால் அதிக சம்பளம் கிடைக்குமென்று பழைய கொள்கையோடு புதிய கொள்கையைப் புகுத்தி மலையக மக்களின் உழைப்பு உறிஞ்சப்பட்டது. அதிக வேலை நேரமும் அதிக வேலை அளவும் குறைந்த கூலிக்கு நிலைத்து விட்டதோடு, இன்று வேலை நாளும் குறைந்து குறைந்த வருமானம் பெற்று வறுமையிலே வாடுகின்றனர். வீட்டுத் தோட்டங்களில் காய்கறி உற்பத்தி செய்யவும் ஆடு, மாடு வளர்க்கவும் வசதிகள் கொடுக்கப்பட்டன.



தொழிலாளர்கள் தங்களின் நேரடிச் சம்பளத்தில் வசதியான வாழ்க்கையை அமைத்து வாழ வேண்டியவர்கள். ஆனால் வருமானக் குறைவால் வேலை நேரத்திற்குமேல் வேலைசெய்து ஓய்வு நேரங்களில் ஓய்வின்றி உழைத்து வருமானத்தைப் பெருக்கி வாழ்கின்றனர். இவையெல்லாம் குறைந்த சம்பளத்தையே குறிப்பிடுகின்றன. குறைந்த சம்பளம், நிறைந்த பிரச்சினைகளைக் கிளப்பி விடுகின்றன. இன்று தொழிலாளர்கட்கும் தொழிற் சங்கங்கட்கும் ஆட்சியாளர்கட்கும் பிரச்சினைகள்தான் பெரிதாகத் தோற்றம் அளிக்கின்றனவே தவிரக் குறைந்த வருமானம் அவர்கள் கண்ணுக்குத் தோன்றவில்லை. வருமானத்தைத் தவிர்த்து மற்றதெல்லாம் பேசுகின்றனர். மக்களின் மனதை மறுபக்கம் திருப்புகின்றனர்.

வறுமை இருளும், அறியாமை இருளும் பலவீன இருளும் மலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யகத்தை மூடிவிட்டது. வறுமையும் அறியாமையும் பலவீனமும் மலையக மக்களின் வாழ்க்கையிலே கொடிய வியாதிகளாக அரித்து அழித்துக் கொண்டு இருக்கின்றன. நல்ல சம்பளம் வாங்கும் நன்னாளில் தான் இருள் ஒழிந்து ஒளி பிறக்கும் மலையக மக்களுக்குத் தீபாவளித் திருநாளின் அர்த்தமும் பொருளும் ஒளி வீசும். மலையக மக்கள் தங்கள் எண்ணத்திலே, பேச்சிலே, செயலிலே பழையன கழிந்து புதியன புகுத்தி புது வாழ்வு பெற்று புதியதோர் தொழிலாளர் தீபாவளித் திருநாளை உருவாக்க உறுதி கொள்ளவேண்டும். மன உறுதியும் தியாக புத்தியும் மக்கள் வாழ்வு வளம் பெற வழி திருப்ப வேண்டும்.

# பதில் சொல் தாயே

**நா. ஜெயபாலன்**

பாலுக்கு அழுகின்ற பாலகனின் கூக்குரல்
கூழுக்கு ஏங்கி நிற்கும் குலமகளைக் குடைந்தெடுக்க
வாளுக்கு தலை கொடுத்த தாய்மாரின் நிலைமாற
கோலோட்சும் தொழில் மகளே கூறம்மா ஒரு வழி

சிட்டாகப் பறந்துழைத்து சீராக வாழ்ந்த
கட்டான எம்மவர்கள் காய்கின்றார் கடும்பசியால்
எட்டாத அருங்கனியாய் ஏகிவிட்ட இன்பமதை
முட்டாளாய் பார்த்தேங்கி முனுமுனுக்கும் நம்மவர்க்கு
கிட்டாதோ எதிர்காலம் கேட்கின்றேன் உனையம்மா

மலையேறி இலை பறிக்கும் மங்கையரின் கரங்களெல்லாம்
வலைப்பின்னல் வாழ்க்கையிலே வகையாக சிக்குண்டு
நிலையான கண்ணீரால் நீக்கமற நிறைந்து நிற்க
விளையுமா வெற்றியின்பம் வினவுகிறேன் உன்னையம்மா

# மாவலிக்கு ஓராண்டு வாழ்த்துக்கள்

தொழிலாளர் தேசிய சங்கத்தால் பிரசுரிக்கப்படும் மாவலி சஞ்சிகையின் ஆண்டு மலருக்கு இவ் ஆசிச் செய்தி அனுப்புவதற்கு சந்தோசமடைகின்றேன். மாவலி இந்நாட்டு நீர், நில மணத்தோடு வெளிவருவதோடு தொழிலாளர்களுக்கென பிரத்தியேகமானதும், தனிரகமுமான சஞ்சிகையாகும். இச்சஞ்சிகை தமிழ் பேசும் தொழிலாளர்களுக்கும், ஏனைய மக்களுக்குமிடையே ஒரு பாலமாக அமைய வேண்டும் என்பது எமது ஆசை.

**செ. குமாரசூரியர்,** அஞ்சல், தொலைத் தொடர்புகள் அமைச்சர்.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் சஞ்சிகையான "மாவலி"யின் வருடாந்த மலருக்கு இச்செய்தியை அனுப்புவதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

மாவலி சங்கத்தின் அங்கத்தினர்களுக்கும், பொதுவாகத் தொழிலாளருக்கும், அவர்களின் வாழ்க்கை நிலை, வேலை நிலை என்பனபற்றியும், சமூக நல விடயங்களை கற்பிற்பதற்கும் வழி கோலுகின்றது.

அரசாங்கம், தொழிலாளர்களுக்கு கல்வி புகட்டுவதை சொந்த நலனுகவும், நாட்டின் நலனுகவும் கருதி கல்விவசதிகளை விஸ்தரித்து வரும் இவ்வேளையிலே ஒரு தொழிற் சங்கத்தின் இத்தகைய கல்வி வளர்ச்சிப் பணி போற்றத்தக்கதாகும்.

இந்த சஞ்சிகை தொழிலாளர்கள் தமது நன்மைகளையும் உரிமைகளையும் உணர்ந்து கொள்பவர்களாய் மட்டுமில்லாது இந்நாட்டு மக்களின் பொருளாதார தேவைகளையொட்டி உழைக்கவும் உதவும் என நம்புகிறேன்.

"மாவலி"யின் ஒளிமயமான எதிர் காலத்திற்கு எனது நல்லாசிகள்.

**டப்ளியு. எல். பி. டி. மெல்,** தொழில் கமிசனர்.

அன்புமிக்க நண்பருக்கு,

தங்களது 'மாவலி' சஞ்சிகை ஓராண்டைக் கடந்துவிட்டதை அறிய மகிழ்ச்சியடைகிறேன். பாட்டாளி மக்களுக்குப் பணி புரிவதையே இலட்சியமாகக் கொண்ட இச்சஞ்சிகை பல்லாண்டுக் காலம் தொடர்ந்து பணியாற்ற வேண்டுமென்று ஆசி கூறுகிறேன்.

இலங்கையிலும் தமிழகத்திலும் எத்தனையோ தமிழ் வார, மாத ஏடுகள் வெளியாகின்றன. அவை பல்சுவை விருந்துகளையும் படைக்கின்றன. ஆயினும் பாட்டாளி மக்களின் கண்ணீர்க் கதையை எடுத்துச் சொல்லி அவர்களது வாழ்விலே மறுமலர்ச்சியை ஏற்படுத்தப் பாடுபடும் ஒரே தமிழ் ஏடு தங்கள் 'மாவலி' தான் என்பது பெருமைப்படக்கூடியது.

தங்களின் இந்த முயற்சி மேலும் மேலும் வெற்றி பெறுக.

**கே. வி. எஸ். வாஸ்,** பிரதம ஆசிரியர், வீரகேசரி - மித்திரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாவலியின் நறுமணம்**

மாவலி தனது இரண்டாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கப் போவது குறித்து நாமெல்லாம் மட்டில்லா மகிழ்ச்சி அடைகின்றோம். இதுவரை காலம் வெளி வந்த இதழ்கள் ஒவ்வொன்றும் தொழிலாளர்களுக்கு மட்டுமல்ல, தொழிலாளர்களைப் பற்றி, அவர்களது துன்பங்களைப் பற்றி அறியாத பலருக்கும் ஒரு அறிவுப் பொக்கிசமாகும்.

மாவலி குறுகிய காலத்திலேயே மக்களிடையே ஓரளவு செல்வாக்கைப் பெற்று விட்டது. மாவலியின் நறுமணம் என்றும் இருந்து கொண்டிருக்கும் என்பது எனது கருத்தாகும்.

ஏ. ஜீ. பாலகிருஷ்ணன்மூர்த்தி,
சின்ன வேவாக்கொல்லை,
அட்டன்.

---

**அமரரின் எண்ணம்**

நம் பாட்டாளி மக்களின் பரிதாப நிலையைப் போக்கி உண்மையான ஒற்றுமையால் மலையக அண்ணு அமரர் வி.கே வெள்ளையன் அவர்கள் செய்த சேவைகள் எத்தனையோ. அதை ஞாபகப்படுத்த வந்தது மாவலி. இந்த இதழ் அவர் உயிருடன் இருந்த போது வெளி வந்திருக்குமே

# மாவலி  மலர்

---

## குறிப்பு

முந்தையோர் செய்த முயற்சியும் அவர்தம்
மூச்சும், உணர்வும் முழுமையாய் இங்கே
சிந்திய இரத்தமும் வியர்வையும், தாங்கிய
சீற்றமும். துன்பமும், நோவினுல் —
நொந்து குமுறி அழுத கண்ணீருடன்
நித்தம் தம்முடல் நிலம் புதைத்துழன்ற
எங்ஙனும் அவர்தம் இரத்தமும்,
வியர்வையும் எலும்பும், எருவாய்
இருப்பதும் அறிந்தோமோ ?

இதை அறிவோம். நம் முன்னோர் சிந்திய இரத்தமும் வேர்வையும் அவர்கள் நொந்து குமுறியழுத கண்ணீரும் தேயிலைச் செடியை வளர்த்தன. பன்னிரண்டு இதழ்களைக் கொண்ட இந்த தேயிலை மலரை காலைப் பனிநீர் அழகு செய்யவில்லை. ஆனுல் தியாக வேள்விக்கு தேவர்கள் வணக்கம் செய்வர் என்றதை மாத்திரம் ஞாபகத்தில் கொள்கின்றோம்.

தொழிலாளர்கள் தங்களது உரிமைகளைப் பாதுகாப்பதற்கு அமைத்துள்ள ஸ்தாபனங்களும், அவைகளின் கருவிகளும் கண்ணீரால் வளருகின்றவை. இவைகள் கருகாது பேணி வளர்க்க வேண்டிய பெரும் பணி மக்கள் விடுதலையில் ஆர்வம் கொண்டவர்களது பொறுப்பாகும்.

தொழிலாளர்களது சங்கத்தை தொழிலாளர்களே தொழிலாளருக்காக தொழிலாளர்களைக்கொண்டு நடத்த வேண்டுமென்பது நமது லட்சியம். எனவே சட்டங்களையும், சங்கத்தையும் நடத்தும் விதிமுறைகளையும் அவசியம் அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

இந்த அறிவை வளர்ப்பதற்கே கடந்த ஒரு வருடமாக மாவலி தொழிற் சங்கச் சட்டம், அரசியல் சமூகப் பிரச்சினைகள். அரசியல் தொழிற் சங்க



" உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம் "

— பாரதி

---

வேற்றுமைகள், கலை கலாச்சாரம், தொழிற் சங்கச் சரித்திரம் ஆகியவை பற்றியும், இளம் எழுத்தாளர்கள் படைத்த கவிதை கட்டுரைகளையும் தாங்கி வந்துள்ளது. அதோடு தோட்டங்களை சுவீகரித்ததன் மூலம் தொழிலாளருக்கு ஏற்பட்ட கஷ்டநஷ்டங்கள், மாதச் சம்பளக் கோரிக்கையில் ஏமாற்றம், இவைகளைப்பற்றியும் பாரபட்சமில்லாது மாவலி சொல்லியுள்ளது.

ஒரு சஞ்சிகை கௌரவமாகவும், தைரியமாகவும் உள்ள நிலைமையை அப்படியே எடுத்துச் சொல்லிவிட்டால் மாத்திரம் போதாது. அதை அழகான முறையில் பரிமாறுவதற்கு ஒரு வாகனமாகவும் அமைய வேண்டும். அந்த வகையில் மாவலி இன்னும் எவ்வளவோ வளர வேண்டியிருக்கின்றது. இதற்கு வாசகர்களுடைய அபிப்பிராயங்களும், ஆதரவும் அவசியமாகும்.

மலை நாட்டவர் நல்வாழ்வில் அக்கறை கொண்டவர்கள் மாவலி போன்ற பிரசுரங்களை மக்கள்மத்தியில் பரப்புவதற்கு முன்வர வேண்டும். இந்தச் சஞ்சிகை இளைஞர்களுக்குச் சொந்தம் என்று பல முறை வலியுறுத்தியுள்ளோம். மாவலியை வளர்ப்பதற்கு அவர்கள் முன்வர வேண்டும். ஏனெனில் —

விடுதலைக் குரலது. வெற்றிக் குரலது.
வீரக் குரலது விரைந்தெழும் கேட்பீர் !
அடிமை நிலையை அகற்றவும் அழைக்கும்
அன்புக்குரலது அன்பரீர் கேட்பீர் !
பூக்கும் மாந்தப் புண்ணிய நாள்தனில்
ஆக்கம் புரிந்தவர் அமைதி இழந்தவர்
மூச்சிலே சுதந்திரத் திருகலந்திடுமே
மூச்சிலே விடுதலைச் சுகம் மலர்ந்திடுமே.
பேச்சிலே வீரமும் உறுதியும் மாட்சியும்
பிறந்திடும் வெற்றிப் பெருவாழ்வாமே.

— வி. வி. —

யானுல் அது மாவலியின் தரத்தை இரட்டிப்பாக்கிக் கொண்டிருக்கும்.

சுருங்கச் சொன்னுல் அமரரால் நாம் அடைந்த நன்மைகள் எத்தனையோ. அவையனைத்தும் தோட்டத் தொழிலாளரின் வாழ்க்கைக்கு வழி வகுத்து விட்டன.

எம். பீ. சுப்பிரமணியம்,
ஒலிபண்ட் கீழ்ப்பிரிவு
நுவரெலியா

---

**மாவலி கங்கையும் மாவலியும்**

மாவலி இரண்டாவது ஆண்டை எட்டிப் பிடிக்கும் இவ்வேளை கடந்த ஒரு வருடமாக வெளி வந்த ஒவ்வொரு இதழ்களைப் பற்றியும் இங்கு குறிப்பிடுவது அவசியமாகிறது. மாவலி ஒரு தொழிற் சங்கப் பத்திரிகையாக இருப்பினும் மற்ற தொழிற் சங்கப் பத்திரிகைகள் போல முழுக்க முழுக்க தங்களது தலைவர்களினதும், அவர்களது செய்கைகளையுமே கூறிக் கொண்டிருக்காமல் பல முக்கிய விடயங்களுக்கும், இளம் எழுத்தாளர்களுக்கும் சந்தர்ப்பம் அளிப்பது உண்மையில் எம்மைப் போன்று இளம் எழுத்தாளர்களின் எழுத்தார்வத்துக்கு ஒரு வித்திடுவது போன்றதாக அமைகின்றது.

இலங்கையை வளமாக்கிக் கொண்டிருக்கும் மாவலி கங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ங்கையைப் போன்று இலங்கையில் இலக்கியத் துறையை இந்த மாவலி எழில் ஆக்கும் என்பது கண்கூடு.

குறிஞ்சிக் காந்தன்,
டிக்கோயா.

---

மாவலி ஆசிரியருக்கு,

மாவலி சஞ்சிகை மலையகமெங்கிலும் வீறுடன் பவனி வருவதைப் பார்க்கும்போது, மலையகத்தின் எதிர்கால சஞ்சிகை வளர்ச்சி ஒளி மயமாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

மாவலிக்கு மெருகூட்டி வரும் தொழிற் சட்டம் பற்றிய கட்டுரைகள், செய்திக் கடிதங்கள், அமரர் வி. கே. யின் இலட்சிய கட்டுரைகள் தொடர்ந்தும் வெளி வரவேண்டும். ஆசிரியர் தலையங்கம் சிந்திக்க வேண்டிய ஒன்றாகும்.

இன்று மலையகத்தில் ஒருவித மறுமலர்ச்சித் துறைக்கு மாவலியும் தன் பங்களிப்பை தகுந்த முறையில் செலுத்துமென எதிர் பார்க்கின்றேன். அத்தோடு மலையக இளம் படைப்பாளிகளுக்கு மாவலியில் தகுந்த இடம் வழங்க வேண்டும். மலையகத்துக்கு பொன் மயமான வருங் காலம் உருவாக்கும் பொருட்டு மலையக இளைஞர் கூட்டம் அணி வகுத்து மாவலி போல வீறு கொண்டு பாய்ந்து செல்ல "மாவலி" நல்வழி காட்டுமாக.

வளரட்டும் மாவலியின் சேவை!
மலரட்டும் தொழிலாளியின் வாழ்வு!!

பன். பாலா,
றை தோட்டம்,
மூன்றாம் பிரிவு,
பலாங்கொடை

---

அன்புள்ள ஆசிரியருக்கு

மாவலி கடந்த 12 இதழ்களிலும் பல அரிய பெரிய விடயங்களை தாங்கி வந்துள்ளது. உதாரணமாக இதுவரை தொழிலாளர்களுக்கு தெரியாமலிருந்த தொழிற் சட்டங்களை கட்டுரை வடிவில் தந்துள்ளது. இது தொழிலாளர்களுக்கு ஒரு வரப்பிரசாதமென்றேதான் சொல்லவேண்டும். தொடர்ந்து வெளிவரும் செய்திக் கடிதம் இலங்கை இந்தியர் பிரச்சினைகள் தவிர வேறு விடயங்களையும் தாங்கி வந்தால் இன்னும் மேலாக இருக்கும். திண்ணை மிகவும் நகைச் சுவையாகவும் அதே சமயம் 'நாட்டில் நடைபெறும் பல விசயங்களையும் மாவலியில் புகுத்தியுள்ளது வரவேற்கத் தக்கது.

கடந்த சில இதழ்களில் சங்கச் செய்திகளும் இடம் பெறுகிறது. இது நமது சங்கம் என்னென்ன செய்து வருகிறதென்பதையும் எங்களைப் போன்றோர் தெரிந்துகொள்ள வசதியளிக்கிறது.

மற்ற தொழிற் சங்க இதழ்கள் அவர்களின் தலைவர்களை துதி பாடுவதையே வழமையாகக் கொண்டுள்ளது. ஆனால் மாவலி இதிலிருந்து மாறுபட்டு தொழிலாளர்களுக்கு வழி காட்டியாக அமைந்துள்ளது. தொ. தே. சங்கம் போலவே அது வெளியிடும் "மாவலியும்" மலையக மக்களுக்கு சேவை செய்யுமென எதிர்பார்க்கிறேன்.

கே. சரவணன்,
அட்டன்.

---

அன்புள்ள ஆசிரியருக்கு,

மாவலியின் ஓராண்டு பூர்த்தியடைந்து இரண்டாவது வருடத்தில் கால் எடுத்து வைக்கும் சிறப்பைக் கண்டு மகிழ்கிறோம்.

கடந்த ஓராண்டாக மாவலி பல கஷ்டங்களுக்கு மத்தியில், தொழிற் சட்டங்கள், சமூக பணி, தொழிலாளர்களின் சேவை, மற்றும் இளம் எழுத்தாளர்களினதும், முதிர்ந்த எழுத்தாளர்களினதும் ஆழமான கவிதை, கட்டுரைகளை தாங்கி வந்தது. மாவலி மலையகத்தில் தனியானதொரு இடத்தை பிடித்துவிட்டது. மாவலி கங்கையைப் போன்று நம் சஞ்சிகை நீண்டு பணியாற்ற வாழ்த்துகிறேன்.

செல்வி எம். தனலட்சுமி,
அல்கொல்லை டிவிசன்,
அப்புகஸ்தலாவ.

---

அன்புடையீர்,

"மாவலி" இரண்டாவது ஆண்டு மலர் வெளிவருவதறிந்து பெரு மகிழ்வுடன் வாழ்த்தி வரவேற்கின்றோம்.

மலையக மக்களின் இதயக் குரலாக, அவர்கள் வாழ்வுடன் இணைந்து, அவர்களது நல்வாழ்விற்கு வழி காட்டும் ஒளி விளக்காக "மாவலி" பல்லாண்டு நிலைத்து நற்பணி புரியவேண்டுமெனப் பாராட்டி வரவேற்போமாக.

வாழ்க மாவலி!
வளர்க அதன் பணிகள்!!

கே. கே. ரி. சர்மா,
ஸ்ரீ கதிரேசன் கோவில்,
மாவனல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில் துறையில் பெண்கள் பங்கு

பெண்கள் தொழில் செய்யப் புகுவது எப்போதும் பொருளாதாரக் காரணிகளால் மட்டும் நிருணயிக்கப்படுவதில்லை. பாரம்பரியம், சமூகத்தில் பெண்கள் பற்றிய கோட்பாடுகள் என்பனவும் இதனை நிருணயிக்கின்றன. இலங்கையின் சனத் தொகையில் 51.3 வீதமானோர் ஆண்கள், 48.7 வீதமானோர் பெண்கள். இப்பெண்கள் தொழில் உலகில் எத்தகைய பங்கை வகிக்கிறார்கள், அரசாங்கம் இவர்களுக்கு எவ்வளவு தூரம் ஊக்கமளித்து வருகின்றது என்பன போன்றவற்றை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இலங்கையின் வரலாற்றில் சங்கமித்தை, விகாரமகாதேவி, அனுல ஆகிய பெண்மணிகளின் பெயர் பொன்னெழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளன. இருபதாம் நூற்றாண்டில் அதாவது 1931-ல் திருமதி ஏ. எவ். மொலுமகார ஆட்சி சபைக்கு ருவான்

**திருமதி கே. பெர்னாண்டு, உதவி தொழில் கமிஷனர்**

வெலத் தொகுதி அங்கத்தவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன் புதியதொரு சகாப்தம் ஆரம்பித்துள்ளது. இவரைத் தொடர்ந்து பல்வேறு துறைகளிலும் பெண்கள் முன்னணிக்கு வந்துள்ளனர், 1935-ல் திருமதி எசலின் டெரனியகல முதன்முதல் பெண் பாரிஸ்டராகச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். 21.07.1960-ல் தற்போதையப் பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா முதன் முதல் பெண் பிரதமராகப் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார். பாராளுமன்றத்தில் தற்போது பிரதமரைவிட இன்னொரு பெண் பதில் அமைச்சரும் ஆறு பெண் அங்கத்தவர்களும் இருக்கின்றனர். வேறுபட்ட உள்ளூராட்சி மன்றங்களிலெல்லாம் பெண்கள் அங்கத்தவர்களாகவும் வேறு பொறுப்புள்ள அதிகாரிகளாகவும் கடமையாற்றுகின்றனர்.

தற்பொழுது வேலை பார்க்கும் பெண்களின் தொகையை நிர்ணயிக்கப் பலவகையான கணிப்பு முறைகள் கையாளப்பட்டன. இவற்றுள் 1971-ல் தொழிற்றிணைக்களம் செய்த கணக்கெடுப்பினை அடிப்படையாக வைத்து, பணிபுரியும் பெண்களின் வேலைபற்றிய சில சிறப்பு அம்சங்களை நாம் நோக்கலாம். கீழ்வரும் புள்ளி விபரங்கள் அக்கணக்கெடுப்பிலிருந்து பெறப்பட்டன.

| | தொழில் | ஆண் | பெண் | மொத்தம் | பெண்களின் வீதம் |
|---|---|---|---|---|---|
| 1. | நிர்வாக முகாமைத் துறைகள் ... | 15,886 | 793 | 16,679 | 4.8 |
| 2. | விசேட, தொழில் நுட்பத் துறைகள் | 14,045 | 3,662 | 17,707 | 20.7 |
| 3. | இலிகிதர் இதுபோன்ற மற்றும் துறைகள் ... | 50,207 | 9,043 | 59,260 | 15.3 |
| 4. | விற்பனவு ஊழியர் ... | 24,476 | 3,195 | 28,662 | 11.2 |
| 5. | வேறு வேலைகள் மந்திரிமார் தலைமையாட்கள் | 15,414 | 868 | 16,282 | 5.3 |
| 6. | நுட்பமுள்ள தொழிற்துறை ... | 185,179 | 90,879 | 276,072 | 32.9 |
| 7. | நுட்பமற்ற தொழில் முறைகள் ... | 311,655 | 252,630 | 564,285 | 44.8 |

பெண்கள் தொழில் பார்க்கும் ஆற்றை வழிமுறைப்படி நோக்கும்போது, ஆரம்பத்தில் பெண்கள் தமது கணவன்மார் செய்து வந்த தொழில்களில் உதவி வந்துள்ளனர். கம வேலைகளில் ஈடுபட்டும், அது தொடர்பான விற்பனை, சந்தைப்படுத்தல் ஆகியவற்றிலும் பெண்கள் பெருமளவு ஈடுபட்டுள்ளனர். இதன்பின் கமத் தொழில், கைத்தொழில் இவைகள் இயந்திரமாக்கப்பட்ட பின்னர் பெண்கள் இவற்றிலிருந்து ஒதுங்கி வீட்டுக் கடமைகளைப் பெரிதும் மேற்கொள்ளலாயினர்.

இலங்கை இன்னும் இயந்திர மயமாக்கப்பட்ட புதிய யுகத்தைச் சார்ந்ததாகப் பெரிதும் இல்லை. இது காரணமாகவே இன்றும் தொழிலில் ஈடுபட்டுள்ள பெருந்தொகையான பெண்கள் தொழில் நுட்பமற்ற வேலைகளில் ஈடுபட்டிருப்பதைக் காணலாம். தையல் வேலை, றேந்தை பின்னுதல் இவைபோன்ற வேலைகளில் பெருமளவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் ஈடுபட்டுள்ளனர். தோட்டப் பகுதிகளிலேயே பெண்களுடைய பங்கு பத்து வீதம் கூடியதாக இருக்கின்றது. முகாமையாளராகவும் மேஸ்திரிகளாகவும் நுட்பமுள்ள வேலை பார்ப்போராகவும் இருக்கும் பெண்கள் தொகை மிகவும் குறைந்ததாகவே காணப்படுகிறது.

முன்னேற்றமடைந்து வரும் நாடுகளின் சமுதாயத்தில் பெண்களின் பங்கு புறக்கணிக்கப்பட முடியாதது. முன்னேற்றமடைந்து வரும் சமுதாயம் புதியதொரு சகாப்தத்தை அ[illegible] வேண்டுமானால் முழுச் சமுதாயத்தின் ஒத்துழைப்பும் இரு[illegible]ண்டியது அவசியம். இப்புது யுக கர்த்தாக்களாகப் பெண்கள[illegible]லர் இருக்கவும் கூடும். இதனால் பெண்களையும் இவ்வேலைகளில் ஈடுபடுத்துவது மிகமிக இன்றியமையாதது. இது காரணமாகவே தென்கிழக்கு ஆசிய நாடுகள் யாவும் சட்ட ஆக்கங்கள் மூலமும், சமுதாய கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதன் மூலமும் பெண்களின் தழையைத் தகர்த்து எறிந்துள்ளனர். இது காரணமாகவே புதுமைக் கவிஞன் பாரதி,

> மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல
> மாதவம் செய்திட வேண்டுமடா
> பங்கையற்கைநலம் பார்த்தல்லவோ — இந்தப்
> பாரில் அறங்கள் வளருமடா.

— என்று சமுதாயத்தில் பெண்கள் பங்கை நிலைநிறுத்தி வலியுறுத்திப் பாடினான்.

பெண்களை மேலும் மேலும் வேலை செய்வதில் ஊக்குவதுதான் இலங்கை அரசாங்கத்தின் கொள்கையாக இருந்து வந்துள்ளது என்பது அதன் சட்ட ஆக்கங்கள் மூலம் புலனாகிறது. 1930-ம் ஆண்டிலிருந்து பெண்கள் வேலை செய்யப் புகுவதற்கு இருந்த தடைகள் படிப்படியாக நீக்கப்பட்டு வந்துள்ளன. 1933-ம் ஆண்டு பால் தடை நீக்கம் செய்தல் சட்டம் பெண்கள் பாரிஸ்டரா[illegible] முடியாது என்று இருந்த தடையை அகற்றியது. 1942-ம் ஆண்டு இலங்கைச் சர்வ கலாசாலைக் கட்டளைச் சட்டம் பெண்கள் பட்டப் படிப்புப் பெற இருந்த தடையை நீக்கிக் கொடுத்தது. 9-2-1972-ன் இலங்கை நிருவாக சேவைக் குறிப்பு ஒரு குறிப்பிட்ட வீதம் பெண்கள் நிருவாக சேவையில் சேர வகை செய்தது.



தனியார் துறையில் வேலை பார்க்கும் பெண்களுக்கு வசதி செய்யுமுகமாக நீதி ஏற்பாடுகள் தொழிற் சட்டங்களில் சேர்க்கப்பட்டுள்ளன. ஊழியர் சேமலாப நிதிச் சட்டம் திருமணம் செய்து கொண்டு வேலையிலிருந்து நிற்கும் பெண்கள் அத்தொகையைப் பெற்றுக்கொள்ள வகை செய்கின்றது. தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டம் பெண்களுக்குத் தகுந்த மலசலகூட வசதிகள், இளைப்பாறு அறை வசதிகள் தொழிற்சாலைகளில் இருக்க வேண்டுமென்று விதிக்கின்றது. நின்ற நிலையில் வேலை செய்ய வேண்டிவரும் பெண்களுக்கு இளைப்பாறச் சமயம் ஏற்படும் போதெல்லாம் இருப்பதற்கு ஆசன வசதி செய்து கொடுக்க வேண்டுமென்பதும் இச்சட்ட ஏற்பாடுகளில் ஒன்று. கடை அலுவலக ஊழியர் அதிகாரச் சட்டமும் இத்தகைய வசதிகளைச் செய்து கொடுத்துள்ளது. பிரசவ உதவிக் கட்டளைச் சட்டத்தின்கீழ் வேலை பார்க்கும் பெண்களுக்கு பிரசவ காலத்தில் ஆறு கிழமை சம்பளத்துடன் கூடிய விடுமுறை கொடுக்க வேண்டுமென்ற கட்டாயம் இருக்கின்றது. பிரசவம் காரணமாகப் பெண்கள் வேலையை இழக்கும் சந்தர்ப்பம் ஏற்படாமலும் இச்சட்டம் காக்கின்றது.

இவ்வாறு அரசாங்கத்தின் ஆதரவு குறிப்பாகத் தொழிற்றிணைக்களச் சட்டவாக்க ஆதரவு இருக்கும் போது பெண்கள் மேலும் மேலும் வேலை வாய்ப்புகளைப் பெற்று வளர்ந்து வரும் எம் சமுதாயத்துக்குப் பணி செய்வார்களென்று எதிர்பார்க்கலாம். 1975-ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையால் 'பெண்கள் ஆண்டு' என்று பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இது ஒரு அரிய சந்தர்ப்பமாகும். இலங்கையின் பெண்கள் சமுதாயம் இதனைப் பயன்படுத்தி மேலும் மேலும் சிறந்த சாதனைகளை நிறுவுவர் என எதிர்பார்க்கலாம்.

## ஒரு மிளகு

தேசிக்காயின் ஒரு பக்கத்தைக் குடைந்து, அதன் உள்ளேயுள்ள சதைப்பற்றை லேசாய் எடுத்துவிட்டு அந்த இடைவெளியில் மிளகை முழுதாக நிரப்பி துணியால் நன்கு கட்டி, அடுப்பின்மேல் அல்லது சூரிய ஒளிபடும் இடத்தில் தொங்கவிடவேண்டும். தேசிக்காய் நன்கு உலர்ந்தபின், மிளகை மாத்திரம் தனியே எடுத்து டப்பியில் வைத்துக்கொள்ள வேண்டும். ஜலதோசம் கண்டவுடன் ஒரு மிளகை எடுத்து, அதை கம்பியில் குத்தி பற்றவைக்க, அதில் வரும் புகையை முகர, சலதோசம் நீங்கும். தலைவலி, ஒற்றைத் தலைவலி, தலைப்பாரம், ஆகியவற்றுக்கும் சிறந்த நாட்டு மருந்தாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹட்டன் - டிக்கோயா டெலிகேட் கூட்டத்தில்

*பொதுச் செயலாளர் பி. வி. கந்தையா அவர்கள் ஆற்றிய உரை*

காணி சீர்திருத்த சட்டத்தின்கீழ் அரசு தனியார்துறைத் தோட்டங்களில் 50 ஏக்கருக்கு மேல் உள்ள எல்லா நிலங்களையும் சுவீகரித்தது. சோசலிச சமுதாயத்தை உருவாக்க நினைக்கும் அரசின் இந்தப் போக்கை, நாம் முழு மனதுடன் வரவேற்றோம். ஏகாதிபத்திய வாதிகளின் பிடியிலும் லாபம் பெறுவதையே தங்களின் லட்சியமாகக் கொண்ட முதலாளிகளின் சமூதாயத்திலிருந்தும் விடுபட நமது மக்களுக்கு வழி பிறந்து விட்டதென்று எண்ணிய நமக்கு தலையில் பேரிடி விழுந்ததோடல்லாமல், பல போராட்டங்களின் மூலமாகவும். உயிர்த் தியாகங்களின் மூலமாகவும் பெற்ற தொழிற் சங்க உரிமையை இந்த தோட்டங்களில் பறிக்கப்பட்டுள்ளது.

உலகத் தொழிலாளர்கள் ஒன்றிணைந்து தொழிற் சங்க உரிமைக்காகவும் எட்டு மணி நேர வேலைக்காகவும் போராடி ஆயிரக்கணக்கான தொழிலாளர்களை துப்பாக்கிக் குண்டுகளுக்கு பலி கொடுத்து 1886 வருடத்தில் மே திங்கள் முதலாம் நாள் அமெரிக்காவின் சிக்காக்கோ நகரத்திலே நடைபெற்ற மாபெரும் போராட்டத்தின் வெற்றிதான் எட்டு மணி நேர வேலை. இந்த வெற்றியை ஆண்டு தோறும் உலகத் தொழிலாளர் முதலாளித்துவ, கம்யூனிச, சோசலிச நாட்டிலும் கொண்டாடி வருகின்றார்கள். இந்த மே முதலாம் நாள் தொழிலாளியின் திருநாளாகவே கருதுகின்றார்கள் தொழிலாளிகள். நமது நாட்டிலும் மே தினத்தை தொழிற் சங்கங்கள் மாத்திரமல்ல, அரசும் கொண்டாடுகிறது. அந்த தினத்தை பொது விடுமுறை தினமாகவும் பிரகடனப்படுத்தியுள்ளது. ஆனால் அரசு சுவீகரித்த தோட்டங்களிலே நடக்கும் கெடுபிடிகளைக் கண்டால் இலங்கைக்கும் மே தினம் ஒரு கேடா என்று நினைக்கத் தோன்றுகின்றது. காலை ஆறு மணிக்கு வேலைக்குச் செல்ல வேண்டும். கொடுக்கும் கணக்கை முடித்துவிட்டுத் தான் வீடு திரும்ப வேண்டும். இல்லையென்றால் அந்த தினத்திற்கு சம்பளமில்லை, அடுத்த நாள் அல்லது ஞாயிற்றுக் கிழமை நாட்களில் குடும்பத்திலுள்ளவர்கள் அந்த வேலையை சம்பளமில்லாமல் செய்து கொடுக்க வேண்டுமெனப் பலவந்தப்படுத்தப் படுகின்றார்கள். இந்த அநியாயம் சோசலிசம் பேசும் நாட்டில் நடக்கிறதென்றால் அதன் கருத்தென்ன ?



தொழிற் சங்கங்கள் தலையிட முடியாது. தொழில் திணைக்கள அலுவலர்கள் தலையிட முடியாது, அவ்வளவு பயங்கர நிலை.

இந்தத் தோட்டங்களிலே உள்ள துரைகளோ தேயிலைச் செடியை இதற்குமுன் பார்த்திருப்பார்களா என்பதே சந்தேகம். அங்கு கடமையாற்றும் அலுவலகர்கள் சிலரின் கடந்த காலச் சரித்திரத்தைப் பார்த்தால் அவர்களின் தகாத நடத்தைக்காக தண்டிக்கப்பட்டவர்களாகவோ அல்லது இந்தத் தொழிலுக்கே புதியவர்களாகவோதானிருப்பார்கள்.

சம்பளம் வாங்கும் தினத்திலே கணக்கு விபரம் கேட்டால் கொடுத்ததை வாங்கு என்ற பயமுறுத்தல். தட்டிக் கேட்டால் அடிதடி. இந்த அக்கிரமம், அநியாயம் எங்கே நடக்கிறதென்று நினைக்கிறீர்கள் ? அரசு சுவீகரித்த தோட்டங்களிலே — சோசலிசம் பேசும் நாட்டிலே. தொழில் திணைக்களத்திலே புகார் செய்ய முடியாது; அமைச்சரிடம் கூறினாலோ அவர் ஆச்சரியப்படுகிறார். நம்மைப்பற்றி அல்லது தேயிலையைப் பற்றி அவருக்கு கவலை இருந்தால்தானே. அவர்கள் தேர்தலிலே சொன்னதை நிறைவேற்றுகிறார்கள். வேலை வசதி செய்து கொடுப்பதாகக் கூறி மறுபக்கத்திலே வேலை இல்லாத் திண்டாட்டத்தை உருவாக்கி வருகின்றார்கள்.

அரசுக்குச் சொந்தமான காணிகளை மக்களுக்குக் கொடுக்கச் சட்டமிருக்கிறது. அதிலும் பாரபட்சம். முதலாளித்துவ அரசு கொண்டு வந்த இந்தக் காணிக் கொள்கைச் சட்டம் சோசலிசம் பேசும் அரசு இதில் புதுமையைப் புகுத்தி மாற்றியமைக்க முன் வரவில்லை. இந்த நாட்டில் குடியுரிமை பெற்ற இந்திய வம்சாவழிப் பிரஜைகளுக்கு அரசுக்குச் சொந்தமான காணியைப் பெறச் சட்டத்தில் இம்மியும் இடமில்லை. பணம் கொடுத்து காணி வாங்கலாம். ஆனால் எங்களுக்குச் சொந்தமான நிலத்தை கொடுக்க மாட்டேனென்கிறது அரசு. ஆகவே தோட்டத்தில் வாழும் தொழிலாளி, தோட்டத்தை விட்டு வெளியேறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது குடியிருக்க, உழைத்து உண்ண இடமில்லை. வீதிக்குச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தத் திற்குள்ளாக்கப்பட்டு கடைசி யில் பிச்சைக்காரனுக ஆக்கி விடுகிறது.

நல்ல பல சட்டங்களைக் கொண்டு வரும் அரசு தோட்டத் தொழிலாளர்களையும் மதித்து காலத்திற் கொவ்வாத சட்டங்களை மாற்றி, இவர்களுக் கும் வாழ்வளிக்க வேண்டியது அதன் கடமை.

அரசு சுவீகரித்த தோட்டங் களில் தொழிற் சங்க உரிமை களைப் பெறவும், நமது கோரிக் கைகளை வென்றெடுக்கவும் நாம் எப்போதும் தயங்கக் கூடாது.

★

# ஏன் மௌனம்

உணவில்லை யென்று நீ ஓய்ந்திடாதே
உரிமை காக்க போராட தயங்கிடாதே
அடிமையாக நாட்டினிலே வாழ்ந்திடாதே
அநீதியை அழித்திட நீ அஞ்சிடாதே.

மாற்றாரின் தந்திரத்தில் மயங்கிடாதே
மானத்தை விலைகூற நினைத்திடாதே
பணத்திற்காகப் பகடைக்காய் ஆகிடாதே
பாட்டாளி சமூகமே இதை மறந்திடாதே.

விதியை மதி வென்றிடும் மனம் தளர்ந்திடாதே
வீரனே நீ கோழையாக மாறிடாதே
நரிவேசக் காரர் சொல்லை நம்பிடாதே
நாளெல்லாம் கண்ணீர் சிந்திக் கலங்கிடாதே.

பாரெல்லாம் பசி யென்று கெஞ்சிடாதே
பண்பாட்டை காத்திட நீ தவறிடாதே
கடமை கண்ணியம் கட்டுப்பாட்டை வெறுத்திடாதே
காலம் ஓர்நாள் மாறும் இதை மறந்திடாதே.

— எம். சாமிநாதன் —



# சங்கச் செய்திகள்

**தோட்டத் தொழிலாளர் கல்விச் சபை**

இந்தியத் தூதுவராலயத்தின் ஆதரவில் இலங்கை இந்திய தோட்டத் தொழிலாளர் கல்விச் சபை இயங்கிவருகின்றது.

இச் சபையின் கூட்டம் அண்மையில் கொழும்பில் நடைபெற்றது. நமது சங்கச் சார்பில் பொதுச் செயலாளர் திரு. பி. வி. கந்தையா கலந்து கொண்டார். ஒரு சில வருடங்களாக செயல்படாதிருந்த இச்சபையை திரும்பவும் இயங்கச் செய்த பெருமை நமது சங்கத்தையே சாரும். இந்தச் சபைக்கு எமது சங்கம் ரூ. 1000/- நன்கொடையாக வழங்கியுள்ளது.

**இலங்கை மன்றக் கல்லூரி கருத்தரங்குகளில் நமது பிரதிநிதிகள்**

இலங்கை மன்றக் கல்லூரியினுல் தொழிலாளர்களுக்கு நன்மையளிக்கும் பல கருத்தரங்குகள் நடாத்தப்பட்டு வருகின்றன. தொடர்ந்து ஐந்தைந்து நாட்களாக நடத்தப்பட்டு வந்த கருத்தரங்குகளில் இதுவரை எமது சங்கத்தின் சார்பில் கலந்துகொண்டோர்கள்.

திரு. டி. அய்யாத்துரை
,, எம். எஸ். துரைசாமி
,, எஸ். வி. துரைசாமி
,, பி. நல்லையா
,, ஏ கெங்கன்
,, பி. எஸ். பெரியசாமி
,, ஏ. எஸ். ஏகாம்பரம்
,, சவரிமுத்து
,, எஸ். குழந்தைவேல்
,, பி. எஸ். செல்வராஜ்
,, எஸ். பிலிப்
,, பி. இராமையா
திரு. ஆர். கிருஷ்ணசாமி
செல்வி: எல். ஆனந்தம்மாள்
திருமதி. கே எஸ் வள்ளியம்மாள்
திரு. ஆர். பி தங்கமுத்து
செல்வி. பி. சந்திரலேகா
திரு. எஸ். ஓ. இரத்தினராஜா
,, ஆர். மாரிமுத்து
,, எம். செல்லப்பன்
,, எஸ். முருகன்
,, எஸ். பி. ரெட்டியார்
,, ஈ. வள்ளிமுத்து
செல்வி. எம். சிவமணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிக்கோயா மாவட்டம் :

பட்டல்கலே தொழிலாளி சிவனையிக்கு சேவை காலப்பண மாக ரூபாய் 555/- கிடைத் துள்ளது. நமது அரசியல் காரி யதரிசி திரு. பி. பெருமாள் அட்டன் தொழில் கோட்டில் இதனைப் பெற்றுத் தந்துள் ளார்.

கண்டி மானிலம் –மாத்தளை

எல்கடுவை தோட்டத் தொழிலாளி சவரிமுத்து சின் னப்பனுக்கு ரூபாய் 547 50 சேவை காலப்பணமாக கண்டி தொழில் கோர்ட்டில் கிடைத் துள்ளது. இதை நமது கண்டி தொழில் உறவுச் செயலாளர் திரு. எம். ஸி. ஏ. அலஸ் பெற் றுத் தந்துள்ளார்.

நுவரேலியா மானிலம் :

கோட்லாஜ் தோட்டத் தொழிலாளர்கள் இருவர் சேவை காலப்பணத்தை பெற் றுள்ளனர். காமாட்சிக்கு ரூ. 118/-ம், வள்ளியம்மா ளுக்கு ரூ 1215/-ம் நமது அமைப்புச் செயலாளர் திரு. ஜி. இராஜகோபால் நுவ ரேலியா தொழில் கோர்ட்டில் பெற்றுக் கொடுத்துள்ளார்.

கம்பளை மானிலம் :

தெல் தோட்டம் கருப்பன் கருப்பையாவுக்கு சேர வேண் டிய சேவை காலப்பணம் சம் பந்தமாக நமது சங்கம் எடுத்த துரித நடவடிக்கையின் பயனாக ரூ 1575/- அவருக்குக் கிடைத் துள்ளது.

நோர்வூட் மானிலம் :

மஸ்கேலியா புலூம்பீல்ட் தோட்டத் தொழிலாளி கருப் பனுக்கு ரூபாய் 752.50 சேவை காலப் பணமாகக் கொடுக்க வேண்டும் என்று தொழில் கோர்ட்டு தீர்ப்பு வழங்கியது. இவ்வழக்கையும் நமது அரசி யல் காரியதரிசியே பேசினார்.

அட்டன் மானிலம்:

குடஓயா: மட்டுக்கொல்லை தோட்டத் தொழிலாளர் களுக்கு நட்டஈடாக ஒவ்வொரு வருக்கும் 500/- ரூபாய் வழங்க வேண்டுமென மத்தியஸ்தர் நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியுள் ளது. திரு. சி. வி. வேலுப் பிள்ளை அவர்கள் தொழிலாளர் களின் சார்பில் இக்கேஸில் ஆஜரானார்.

கீழ்க்கண்டவர்களுக்கு பணம் கிடைத்தது.



| | |
|---|---|
| சன்னாசி | மீராசாய்பு |
| பழனிவேல் | பூரணம் |
| ஹசனார் | மாரியாய் |
| தங்கவேல் | அமினா அம்மா |
| லெட்சுமி | சப்பானி |
| தங்கவேல் | சுந்தரம் |
| தெய்வானை | மாரிமுத்து |
| ஆவத்தா | மாரிமுத்து |

வீராயி

★

# மனிதன் பறக்கின்றான்

கடல் மேல் நடக்கலாம், தணல்மேலிருக்கலாம், வேறொ ருவர் காணாமல் உலகத்துலா வலாம் என்ற இரகசியங்களைத் தெரிந்த மனிதன் பட்சிபோல் பறக்கலாம் என்ற ஆசையால் உத்தப்பட்டு இந்த நூற்றாண் டில் விமானத்தைக் கண்டுபிடித் தான். அதோடு அவனாசை தீரவில்லை. கடைசியாக பறவை போல் பறப்பதற்கு ஒரு காற் றாடியை கலிபோனியாவைச் சேர்ந்த பொயிண்ட் பேர்மின் என்னுமிடத்தில் கண்டுபிடித் திருக்கிறார்கள்.

இதன் அமைப்பு காற்றாடி யைப் போன்றது. பார்ப்ப தற்கு ராட்சத வண்ணாத்திப் பூச்சியைப் போல் காணப்படும். அதன் கீழ்ப் பகுதியில் பிடித்து தொங்குவதற்கும், அல்லது உட் கார்ந்துகொள்ளுவதற்கும் வச தியமைத்துள்ளார்கள் இதைக் கட்டிக்கொண்டு உயரமான இடத்தில் இருந்து கீழே பாய்ந் தால் ஒரு மணி நேரத்திற்கு 15 முதல் 25 மைல் வேகத்தில் ஆயிரமடி உயரம் வரை எழும் பிச் செல்லும் ஆற்றல் படைத் தது. இந்தப் பொழுது போக்கு பயங்கரப் பொழுது போக்கு. விபத்து ஏற்படும் போது உயிர் தப்புவது பூஜ் ஜியம். எனினும் இந்தக் காற் றாடி மாதம் 700 முதல் 1000 வரை உற்பத்தி செய்யப்படு கின்றதாம்? இந்தக் காற்றாடி வேறு எந்தவிதமான இயந் திரத்தாலும் இயக்கப்படுவ தில்லை. இதன் விலை 4200 ரூபாயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் கட்டுரை

# மலை நாட்டார் சரித்திரம்

தமிழ் தோட்டத் தொழிலாளர்களில் அனேகர் இந்து மதத்தைச் சேர்ந்தவர்களாவர். சமய அறிவும், போதனைகளும் இல்லாதிருந்தும் சமய அனுஷ்டான வழி முறைகளை இவர்கள் கடைப்பிடித்து வருவதால் மதக்கட்டுக்கோப்புக்குள் இருக்கின்றார்கள்.

சிங்களத் தோட்டத் தொழிலாளர்கள் புத்த மதத்தைச் சேர்ந்தவர்களாவர்.

## நவீன மத இயக்கங்கள்

இந்து சமயம் ஒரு தனித்துவ சமயமாகும். இந்துக் கோயில்கள் மேற்பார்வை யில்லாது சுதந்திரமாக இயங்குபவை. தோட்டப் புற கோயில்களுக்கு ஒரு பூசாரி நியமிக்கப்படுவார். கோவிலில் நடைபெறும் பல தரப்பட்ட விழாக்களுக்கு ஒரு கமிட்டி பொறுப்பாக இருக்கும்.

பொதுவாக ஒவ்வொரு தோட்டத்திலும் இரண்டு, மூன்று இந்துக் கோயில்கள் உண்டு. தீபாவளி, ஆடிப் பூசை, பொங்கல் என்பன இந்துக்களின் விசேட தினங்களாகக் கொண்டாடப்படுகின்றன. இத்தினங்களில் தோட்டத்தில் வேலை இருக்காது. வரி வசூலிக்கப்படும் போது சங்கச் சார்பு, சாதி பாகுபாடு காரணமாக கருத்து வேற்றுமைகளும் ஏற்படுவதுண்டு.

பூசாரி அனேகமாக ஒரு தொழிலாளியாகவே இருப்பார். இவர் மதச் சடங்குகளில் பயிற்சி பெற்றவர் அல்ல. ஆனாலும் ஒரு சில மதச் சடங்குகளைத் தெரிந்தவராக இருப்பார்.

கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் உள்ள சமய வளர்ச்சி இயக்கங்கள் தோட்டத்தொழிலாளரைப் பொறுத்தவரை அக்கறை காட்டுவதில்லை. ஏனெனில் தோட்டத் தொழிலாளர்கள் ஒதுக்கப்பட்டவர்களாக கருதப்படுவது தான்.

வண: பிதா ஆஞ்சிலோ
ஸ்டெபாநிட்சி, எஸ். ஜே.



இதிலிருந்து இவர்கள் எப்படி அலட்சியமாகக் கருதப்படுகிறார்கள் என்பதைக் காணக் கூடியதாக இருக்கின்றது. தோட்டப் புறத்தைப் பற்றி நன்கு அறிந்த ஒருவர் கூறுவதாவது :-

''கத்தோலிக்கர்களுக்கு மத போதகர்களும், பௌத்தர்களுக்கு பிக்குகளும் மத போதகர்களாக இருக்கும்போது, இந்து மத தோட்டத் தொழிலாளர்களுக்கு சமய அறிவைப் போதிப்பதற்கு ஒருவரும் இல்லை''

## மறுமலர்ச்சி இயக்கங்கள்

சமயத்தில் அறிவு குன்றியிருந்தாலும் கதிர்காமத்தில் நடக்கும் விழாக்களும், மற்றும் பாரம்பரிய இந்துப் பெருநாட்களும் தங்கள் மதத்தின் மேல் ஒருவித ஆத்மீகப் பற்றை வளர்க்கிறது. பௌத்த மத எழுச்சியின் பின் சில இந்துக் கோயில்கள் திருத்தப்பட்டன; சில புதிய கோவில்களும் கட்டப்பட்டன.

## இளைஞர்களும் மதமும்

தோட்டப்புற இளைஞர்கள் பெரும் துன்பங்களுக்கு மத்தியில் வாழ்கின்றார்கள். சினிமா, சினிமா சம்பந்தமான புத்தகங்கள், பொருளாதாரப் பிரச்சினை இவை யாவும் மாமிச உணர்ச்சியை பின்னணியாகக் கொண்ட இந்து மதத்தைப் பற்றி சிந்திக்கவோ, பற்றுதல் கொள்ளவோ அவசியமில்லாமல் செய்து விடுகின்றது. அதோடு தொழில் ஒன்று கிடைப்பது இவர்களுக்கு பெரும் பாடாகும்.

மனச் சலிப்படைந்து தோட்டத்தை விட்டு கொழும்பு போன்ற இதர இடங்களுக்கு வேலை தேடிச் செல்பவர்கள் மதப் பற்றிலிருந்தும் விடுபட்டவர்களாகி விடுகிறார்கள்.

தோட்டப் புற படித்த இளைஞர்களின் நிலையோ இதைவிட மோசமாக இருக்கின்றது. இவர்களுக்கு எங்கும் வேலை கிடைப்பதில்லை. தோட்டத்தில் ஒரு சிலரே சுப்பவைசர்களாக தேர்ந்தெடுக்கப்படுகின்றார்கள். தற்போது அதற்கும் சிங்களவர்களுக்கே சலுகை காட்டப்படுகின்றது. அரசாங்கத்தைப் பற்றி நினைக்க முடியாது. ஏனெனில் அவர்கள்தான் குடியுரிமை அற்றவர்களாயிற்றே. எனவே இவர்கள் தனியார் துறையிலும், தோட்டத் தொழிற் சங்கங்களிலும் வேலைக்கு சேர்கின்றார்கள். இப்படியான பாகுபாடு காரணமாக தோட்டப்புற இளைஞர்கள் விரக்தியுற்று காணப்படுகின்றார்கள்.

தோட்டப்புற படித்த இளைஞர்களும், படிக்காத இளைஞர்களும் தோட்டங்களில் நடக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் கொடுமைகளை எதிர்க்க ஏதாவதொன்று செய்யவேண்டும் என்ற விருப்போடு இருக்கின்றார்கள். இதன் உத்வேகமே இவர்களை தொழிற் சங்கங்களில் சேர்ந்து தமது உரிமைக்காக போராடச் செய்கின்றது.

இப்படி மலிந்து வியாபித்து இருக்கும் ஏமாற்ற நிலை இவர்களை மிதவாதிகளோடு சேர்ந்து சமூகத்தை எதிர்க்கும் நடவடிக்கைகளில் ஈடுபடச் செய்கின்றது. வழக்கமாக இடதுசாரிக் கட்சிகளோடு சேர்வது இதற்கு ஆதாரமாக அமைகின்றது.

### மூடப் பழக்க வழக்கங்கள்

இந்தியத் தோட்டத் தொழிலாளர்கள் மூடப் பழக்க வழக்கங்கள் நிறைந்தவர்கள். நல்ல நேரம் பார்த்தல், நல்ல சகுனம் பார்த்தல், நல்ல நாள் பார்த்தல் போன்றவற்றில் நம்பிக்கை வைக்கின்றார்கள். அத்தோடு இயற்கையாகத் தோன்றும் நோய்கள் பேய்களின் நோக்கால் ஏற்பட்டவை எனக் கருதுகின்றார்கள். இதற்குப் பரிகாரமாக மாந்திரிகம் செய்வதோடு, பேயாட்டத்தால் இவற்றை நிவர்த்திக்க முயலுகின்றார்கள்.

## தோட்டங்களை அரசு சுவீகரித்த பின் தேயிலை உற்பத்தி பெரிதும் வீழ்ச்சியடைந்துள்ளது.

தோட்டங்களை அரசாங்கம் சுவீகரித்த பின் தேயிலை உற்பத்தி அதிகரித்துவிட்டதென உணவு, விவசாய அமைச்சர் திரு. ஹெக்டர் கொப்பேகடுவ கூறிய கூற்றுக்கு மாறாக மத்திய வங்கியின் அறிக்கை கூறுகிறது.

1974-ம் ஆண்டு மே மாதத்தில் தேயிலை உற்பத்தி கடந்த வருடம் இதே மாதத்திலிருந்த உற்பத்தி அளவைவிட 60 லட்சம் றாத்தல் குறைந்துவிட்டது. மத்திய வங்கியின் ஜூலை மாத அறிக்கையின்படி 1974-ம் ஆண்டு மே மாதம் தேயிலை ஏற்றுமதியால் கிடைத்த வருமானம் 56 கோடியே 85 லட்சம் ரூபா. கடந்த ஆண்டு இதே கால கட்டத்தில் கிடைத்த வருமானத்தைவிட 3 கோடியே 13 லட்சம் ரூபாய் குறைந்துள்ளது.

குறித்த காலத்தில் நல்ல ரக தேயிலை ஏற்றுமதி அளவில் 3 கோடியே 19 லட்சம் றாத்தல் தேயிலை வீழ்ச்சியுற்றுள்ளது என்று மத்திய வங்கியின் அறிக்கையில் இடம் பெற்றுள்ளது.



### மலையக இளைஞர்களே

## புதுப் பொலிவு காண வாரீர்

இரா. கணேசதாசன்

மலையக இளைஞர்கள் இன்று புத்துணர்ச்சி பெற்று வருவதை நாம் காண்கிறோம். மலையகத்தின் இளைஞர் படை திரள்கிறது. அது எந்த வகையில் என்பதையும் தெட்டத் தெளிவாக்க வேண்டும். சமுதாயப் பணியில் ஈடுபட்டிருக்கும் இளைஞர் அணி, இலக்கியம் சமைத்து அதில் கருத்து கருவூலங்களை பதித்து எழுதும் இளம் எழுத்தாளர்கள், நாடகத் துறையில் ஈடுபட்டிருக்கும் இளம் கலைஞர்கள் இப்படிப்பட்ட பல இயக்கங்களையும் சார்ந்த அந்த அணி திரண்டு வருகிறது.

இனிமேல் படிப்பறிவற்றவர்கள் — இயற்கை அன்னை நமக்களித்திருக்கும் இந்த மலைச்சாரலிலே, அதாவது இந்த மலைநாட்டில் இருக்கவே கூடாது என்று இன்றைய இளைஞர்கள் திடசங்கற்பம் பூண்டுள்ளனர்.

ஆறறிவு படைத்த மனிதர்கள், மிருகத்திலும் கேவலமாக நடக்க முற்படக்கூடாது. அப்படி நடந்தால் அவர்களை திசை திருப்பி நல்வழியில் ஈடுபடுத்த ஒவ்வொரு இளைஞனும் மனதில் உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும்.

மலையக இளைஞன் ஒவ்வொருவரும், இந்த பிரதேசத்தின் மாணிக்கத் தலைவனாக திகழ வேண்டும். இதுதான் நமதெல்லோருடைய விருப்பம்.

— அன்று மகாகவி பாரதியார் இதை கவிதை வடிவில் எம் மனதில் வித்திட்டார். ஆனால் இந்த பாரதி வழியில் நடக்க முற்படுகிறார்களா? இல்லவே இல்லை. தொடர்ந்தும் இந்த "இல்லை" என்ற வார்த்தை நம் சமுதாயத்தில் எழவே கூடாது.

"பாரதி கண்ட இளைஞனாக ஒவ்வொருவரும் வரவேண்டும்,

இது இப்படியிருக்க இளைஞர் சமுதாயத்துடன் போட்டியிடும் அளவிற்கு மலையக மங்கைகள் வீறு நடை போட்டு முன்னேறுவதைக் கண்டு, பெருமகிழ்ச்சியடையும் அதே வேளையில் இளைஞர்களான நாம் வெட்கித் தலை குனிய வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதையும் கூறத்தான் வேண்டும்.

நாவலப்பிட்டி பகுதியில் இந்த மங்கைகள், "மலையேறுவதில் மட்டும் போதாது, மேடையிலும் ஏறவேண்டும்" என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனப்பான்மையுடன் செய லாற்றி வருகிறார்கள். "எதையும் தாங்கும் இதயம்" எம்மிடமுண்டு என்ற பேரறிஞர் அண்ணாவின் அமுத மொழியை அள்ளித் தெளிக்கின்றனர்.

எனவே தற்போதைய மலையக இளைஞர்களின் புதுப் பொலிவுக்கு இந்த மங்கைகளும் காரண கர்த்தாவாக இருக்கின்றனரென்றால் மிகையாகாது.

நாங்கள் மட்டும் சளைத்தவர்களா என்ன? என்று தம்முள்ளேயே வினவிக் கொள்ளும் இளைஞர் படையினர் இலவசமாக தொழிலாளர்களுக்கு படிப்பிக்க பிரயத்தனம்செய்து கொண்டிருக்கின்றனர். இன்றைய இளைஞர்கள், நாளைய மன்னர்கள். இவர்கள் சமுதாயத்தின் வழிகாட்டிகளாக, வாழ்க்கைக்கு ஒளி பாய்ச்சும் ஒளி விளக்காக நமது பின்னால் வந்து கொண்டிருக்கும் இளம் சகோதரர்களாவர். அந்த இளம் சந்ததியினருக்கு புத்துணர்ச்சியூட்ட; புதுப் பொலிவு கொடுக்க மலையக பாட்டாளித் தோழர்களே, சகோதரிகளே "மலையகத்தில் புதியதோர் உலகம் படைக்க" முன்வருவீர்களாக.

---

## சேற்றுப்புண் :

சிறிது கடுகு ரோணியை எடுத்து வறுத்து இடித்து வஸ்திர காயம் செய்து, பின் இதோடு தேங்காயெண்ணை சேர்த்து குழம்பாக்கிப் பூசிவர சேற்றுப்புண் ஆறிவிடும்

## ரோஜா :

ரோஜா இதழை தேனில் ஊறவைத்து, தினம் சாப்பிட்டு வந்தால் உடல் மினுமினுப்பு, இரத்த சுத்தி, இந்திரய பலம் விருத்தியாகும்.

## ரோஜா துவையல் ;

ரோஜா இதழை நன்கு ஆய்ந்து, சிறிது நெய்விட்டு வதக்க வேண்டும். பின் துவையலுக்கு வேண்டிய வெள்ளைப்பூடு, கொச்சிக்காய், கொத்தமல்லி, சீரகம், கறிவேப்பிலை ஆகியவற்றுடன் சிறிது புளி சேர்த்து துவையல் செய்தால் நன்கு சுவையாக இருக்கும், பித்தம், மலச்சிக்கல் ஆகியவற்றுக்கு நல்லது.



## ஏழு வருடமாக பாதயாத்திரை செய்யும் நான்கு சர்வோதய சகோதரிகளில் ஒருவரான செல்வி லெட்சுமியின் உரை

மிருகங்கள் பசி ஏற்பட்டு உணவை உண்ணும். உண்ட பின்பு மீண்டும் உண்ணும் பழக்கம் மிருகத்திடம் இல்லை. ஆனால் மனிதனிடம் அந்த குணம் இருக்கின்றது. வயிறு புடைக்க உண்டாலும் "ருசியான உணவு சாப்பிடுங்கள்" என்று கூறினால் மீண்டும் சாப்பிடுகிறான். இந்நிலையிலிருந்து மனிதன் மாறி உயர்நிலை அடைய வேண்டும். நாம் எமது சர்வோதய கொள்கையை உலகின் பல பாகங்களிலும் பரப்புவதற்கு ஏழு வருடங்களாக பாதயாத்திரை செய்து வருகிறோம்.

உழைக்கும் சக்தியைப் பெருக்க வேண்டும். எங்களுக்குத் தேவையானவற்றை நாங்களே உற்பத்தி செய்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு கிராமமும் தங்கள் கிராமத்திற்குத் தேவையானவற்றை உற்பத்தி செய்து வாழ வழி செய்து கொள்ள வேண்டும். கல்வி திட்டம் வாழ்க்கைக்கு நெருங்கிய தொடர்புள்ளதாக இருக்க வேண்டும்" என்றார்.

## விலைவாசியை குறைக்க தமிழக தொழில் அமைச்சர் திரு. மாதவன் வெளிநாட்டு பேட்டி ஒன்றுக்குக் கூறியது.

நம்முடைய நாட்டில் மக்கட் தொகை நாள்தோறும் பெருகி வருகின்றது. அவர்களுடைய தேவைக்கேற்ற அளவிற்குப் பொருள்கள் உற்பத்திச் செய்யப்படவில்லை. இதுதான் விலைவாசி ஏற்றத்துக்கு காரணம். இதற்கு பரிகாரமாக ஊதிய உயர்வு தரப்படுகின்றது. ஆனால், இந்த பரிகாரம் மேலும் சிக்கலைத்தான், விலைவாசி உயர்வைத்தான் உருவாக்குகின்றது. இந்த உண்மையைத் தைரியமாக மக்களிடத்திலே எடுத்துக் கூறி, நம்முடைய திட்டங்கள் வெற்றி பெற, மக்கள் தொகை கட்டுப்படுத்தப்பட்டாக வேண்டும். பொருட்களின் உற்பத்தி எந்த காரணத்தாலும் தடைபடாது பெருகிட வேண்டும் என்று எடுத்துக் கூறும் மனவலிமை இன்றைய அரசியல் தலைவர்களுக்கு கிடையாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண் ஞானம் - சோதிடம்

(மாவலியின் முதலாவது ஆண்டு மலரில் எண் ஞானம் பகுதியை ஆரம்பிப்பதில் நாம் மட்டில்லா மகிழ்ச்சியடைகின்றோம்.

உலகில் பிறந்த ஒவ்வொருவரும் தமது எதிர்காலத்தைப் பற்றி அறிந்துகொள்வதில் மிகுந்த அக்கறை கொண்டுள்ளார்கள் எமக்கு வந்து சேர்ந்துள்ள "எண் ஞானம்" (கூப்பன்களே) இதற்குச் சான்றாக அமைகின்றன.

எண் ஞானம் பகுதிக்கு ஒதுக்கப்பட்டுள்ள பக்கங்கள் இரண்டாகும். எல்லோரினதும் எதிர்கால பலன்களை ஒரே இதழில் தெரிவிக்க முடியாமைக்காக வருந்துகிறோம். எனினும் எமக்கு வந்து சேரும் கூப்பன் பிரகாரம் உங்கள் விருப்பங்கள் நிறைவேற்றப்படும்.

நன்றி

**பா. வாணி, அட்டன்.**

நீங்கள் செவ்வாய் ஆதிக்கத்தில் பிறந்தவர். மனோதிடம், வீரம் ஆகிய குண நலங்கள் நிரம்பப் பெற்றவர். எனினும் வாக்கில் சிடுசிடுப்பும் எரிந்து விழும் தன்மையும் காணப்படும். வயது ஒன்பதில் உயர்ந்த உமது வாழ்க்கை நிலை 17-வது வயதுவரை நீடித்துள்ளது. பின் இன்றுவரை மந்த நிலையில் உள்ளது. செவ்வாயின் கதிர் பூரணமாக விழுதலே உஷ்ண சம்பந்தமான நோய்கள், திரேக மெலிவு ஏற்பட்டு இருக்க வேண்டும் முயற்சிகளில் அரைப் பங்கு பலனை அடைந்திருக்கின்றீர்கள் இந்த மந்த நிலை உங்கள் வயது 27-ல் மாறிவிடும். செல்வம் சேரும் காலமும் இதுவாகும். 23-ம் வயதில் நல்ல மாற்றமுண்டு வாழ்க்கையில். வாழ்க்கையை சீர்செய்து கொள்ளவும்.

நாயுருவி இளம் குச்சியால் பல் துலக்கி. சூரிய நமஸ்காரம் செய்தல் உங்கள் உடல் நலத்திற்கு இயற்கை மருந்தாகும் உணவில் வேலிப் பசலியை சேர்த்துக்கொள்ளவும். 5 - 6 -9 கூட்டு எண்கள் நல்ல பலனைத் தரும். புஸ்பராகம் அணிவது மிகச் சிறந்தது. (நாக்கு அல்லது உடம்பின் பின்புறத்தில் கரும் புள்ளிகள் உண்டு.)

**சதாசிவம், பெரியநுவலை, நோர்வுட்**

திங்கள் உமது பிறப்புக் கிரகம். வெண்முத்து அணிவது நல்லது. வாழ்க்கை தேய்ந்தும், உயர்ந்தும் இருக்கும். உங்கள் வாழ்க்கை முன் பகுதி தேய்வு; மத்திய காலம் சிறப்பாக உள்ளது. 1976 முடிய உமது நிலை உயர்ந்துவிடும். தொழில், அமைய வாய்ப்பு உண்டு. முதல் தொழில் நிரந்தரமானதல்ல. 12 வயதில் தோன்றிய சிரம நிலை 1969-ல் சீர்பட்டு விட்டது. எனினும் பூரண பலனை அடையவில்லை. நீந்துதல், வாகனங்களை வேகமாகச் செலுத்துதலை தவிர்த்தல் வேண்டும். முகம் கால் பகுதிகளில் இதனால் காயம் ஏற்படலாம். இனிப்பை சிறிது காலத்திற்கு ஒதுக்கவும். காமக் கிரகத்தின் தாக்கத்தில் இருந்து நீங்கள் விலகியிருப்பதற்கு இது வழியாகும். 1, 2, 5, 6 எண்கள் அதிர்ஷ்டமானவை.

**ஜி. கிருஷ்ணன்,**
**சி. வேவாக்கொல்லை, அட்டன்.**

நீங்கள் சகட யோகக்காரர். எதிர்பாராத விதத்தில் செல்வத்தை அடைவீர். இளம் வயது சூனிய காலமாக உள்ளது. ஏதோ வாழ்ந்துள்ளீர் 1961-க்குப் பின் சிறிது சிறிதாக நிலைமை மாறி வந்துள்ளது. குடும்ப நிலையும் திடப்பட்டுள்ளது. பசு வளர்த்தல், வியாபாரம் செய்தல் நல்ல பலனைத் தரும். மது அருந்துதலை தவிர்க்கவும். கோள்கள் நல்ல நிலையில் அமைந்துள்ளன எனவே நீங்கள் நல்ல வழியில் முயன்று பயனை அடைந்து கொள்ளுங்கள். 4, 5, 6 எண்கள் நல்லது.

**எம். ரஸ்கின், லியன்கல, மடுல்கல**

உமது அறிவு விசாலமானது. முகத்தில் தேசஸ் பொருந்தியவர். தோல்வி என்பது உமது வயது 19 முடியக் கிடையாது. (காதல் தோல்வி உண்டு) வியாபாரம், அரசியல், கலை ஆகியவற்றில் பிரகாசிக்கலாம். 20 வயதில் தொழில் கூடும் வாய்ப்புண்டு. பேச்சாளராக வர உமது பிறப்பு எண்ணில் இடம் காணப்படுகின்றது. எனினும் நீங்கள் அடக்கத்தை கடைப்பிடிக்க வேண்டும். படிப்பதலோடு ஆத்தும சம்பந்தமான விசயங்களில் மனதை ஒருமைப்படுத்துதல் நல்லது. (வயது 36-க்கு மேல் 40-க்கு இதன் பலனை நீங்கள் அறிவீர்கள்) கீரை வகைகளை முடிந்த அளவு அரை வேக்காட்டுடன் அல்லது பச்சையாக உண்ணவும். உமது கண்ணின் ஒளியில் மத்திய காலத்தில் ஒளி மங்கலுக்கு இடம் இருக்கின்றது. (இடம் போதாமையால் சுருக்கமே இங்கு தரப்பட்டுள்ளது) பச்சைக் கல், மரகதம் அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவரை மல்லி என்னும் பச்சை நிறக்கல்லை 5:5 என்ற விகிதத்தில் தங்கமும், வெள்ளியும் சேர்த்து மோதிரம் செய்து, அணிந்து வரவும். 5, 1 வெற்றிக்குரிய நாட்கள்.

ரா. கருப்பையா,
பட்டல்கல்ல, டிக்கோயா.

நீங்கள் மனோசக்தி மிக்கவர். ஆறு வயதிலே வியாழனின் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகி உமது மூளைப் பகுதி விசாலமடைந்துள்ளது. மனக்கோட்டைக் கட்டுவதில் வல்லவர். காதல் வசப்படுவது உமது பொழுது போக்கு. 1961-1969 வரை உமது வாழ்வில் நல்ல காலமல்ல 1969-க்குப் பின் இதுவரை மத்தியக் காலம். (எல்லா விசயத்திலும்) இந்திரிய பலம் குறைந்து காணப்படுகின்றது. சின்ன வெங்காயம், அகத்திக் கீரை, பொன்னாங்கன்னி ஆகியவற்றை உணவில் அதிகம் சேர்த்துக் கொள்ளவும். உங்கள் வாழ்வில் ஒரு பெரிய மாற்றம் காணப்படுகின்றது. இடம் பெயர்தல் தொழில் மாற்றம் உண்டு. இதற்குப் பின் வாழ்வு முன் பகுதியில் சிரமத்துடனும், பின் பகுதியில் செல்வத்துடனும் இருக்கும். தெய்வ வழிபாடு சாலச் சிறந்தது.

# அமரருக்கு அஞ்சலி

அமரர் வெள்ளையனின் மூன்றாவது நினைவு தினமான கடந்த 2 12 74. அன்று மத்தியக் குழு உறுப்பினர்கள் நிர்வாக சபை அங்கத்தவர்கள், மானில, கிளைச் செயலாளர்கள், வாலிப, மாதர் குழு உறுப்பினர்கள் — அமரரின் நினைவாக அட்டன் ஸ்ரீ கதிரவேலாயுதசுவாமி ஆலயத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பூசையில் கலந்து கொண்டார்கள்.

பின்னர் டிக்கோயா நகரில் அமைந்துள்ள அமரரின் சமாதிக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செய்தார்கள்.

★

8. 12. 74. ஞாயிற்று கிழமை பி. ப. 2 மணிக்கு அட்டன் நகரசபை மண்டபத்திலும், 14. 12. 74, 15. 12 74 திகதிகளில் கலகா, பசறை மாவட்டத்திலும் நினைவு தினக் கூட்டங்கள் நடைபெறும்.

★

இரண்டறக் கலந்து பழகுவதில் அவருக்கு நிகர் அவர்தான். என்னிடம் ஒரு முறை அவர் கூறியது: "நான் நேர்மையாகவும், கடமையுணர்வோடும் செயலாற்ற வேண்டுமென்பது, என் இலட்சியம். இதனால் பல பேருக்கு என்னைப் பிடிப்பதில்லை மற்றவர்கள் செய்யும் குற்றத்துக்கும், குறைகளுக்கும் நான் எப்போதும் உடந்தையாக இருக்க மாட்டேன். இதுவே என்னிடத்திலுள்ள பெரிய குறை."

தோட்டத் தொழிலாளருக்கு பல வசதிகளை செய்து கொடுத்தும், கொடுக்கவும் செயல்பட்டார். 1964-ம் ஆண்டில் ஸ்ரீமா — சாஸ்திரி ஒப்பந்தம் ஏற்பட்டவுடன் இது நேர்மையான ஒப்பந்தமல்ல. புனர்வாழ்வு திட்டம், ஒரு மறுவாழ்வுத் திட்டம். வசதிப் படைத்தவர்கள், நிலம் உள்ளவர்கள் இந்தியாவுக்கு மனுப் போடுங்கள். மற்றவர்கள் இலங்கைக்கு மனுப் போடுங்கள் என்று தூண்டினார்.

ஐந்து வருடம் முதல் ஐம்பது வருடம் வரைச் சேவை செய்திருந்தாலும், வருடத்துக்கு அரை மாதச் சம்பளத்தை சேவை காலப் பணமாக கொடுக்க வேண்டும். வயது சென்று ஓய்வுபெறும் தொழிலாளர்களுக்கு ஓய்வு காலப் பணம் (பென்சன்) வழங்க வேண்டும். இவைகளில் சேமலாப நிதியில் முதலாளிமார்கள் கொடுக்கும் தொகையை கழிக்காது, சேமலாபநிதியையும் கொடுக்க வேண்டும் என தொழில் கோர்ட்டில் வன்மையாக வாதாடினார்.

இதில் கிடைத்த தீர்ப்பின் காரணமாக இன்று இளைஞர் முதல் முதியோர் வரை சேவை காலப் பணம் பெற்று தாயகம் திரும்ப முடிகின்றது. இலங்கை வாசிகளும் வேலை செய்யும் முதலாளியிடம் சேவை காலப் பணம் வாங்க வழியேற்பட்டது. தோட்டத்தைவிட்டு தொழிலாளர்களை வெளியேற்றினால் நட்டஈடும் சேவைகாலப் பணமும் கொடுக்க வேண்டும் என்ற நிலை உருவாகியது.

அவரின் எண்ணத்தை செயலில் காட்ட தொழிலாளர் தேசிய சங்கத்தை திட்டமிட்டு ஆரம்பித்து, தொழிலாளர்களையே நடத்துபவர்களாகவும், தலைமை தாங்கவும் வழிவிட்டு, தான் தொண்டனாக கருமமாற்றிய கரும வீரன் 1971-ம் ஆண்டு மார்கழி திங்கள் 2-ம் நாள் எம்மை ஆராத்துயரில் ஆழ்த்திவிட்டு சென்ற மூன்று ஆண்டு நிறைவு அடையும் போது இதயம் நெகிழ்ந்து, இம்மலரை அன்னாருக்கு சமர்ப்பித்து அஞ்சலி செலுத்துவோமாக.

த. அய்யாத்துரை,
தலைவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது.
Registered at the G. P. O.

# மாவலி ஏஜண்டுகள்:-

என். பாலசுப்பிரமணியம்ஸ். ஹட்டன்.
வெள்ளையன் ஞாபகார்த்த வாசிகசாலை "

டி. எம். தாசன், ஜெயம் ஸ்டோர்ஸ்
304 பிரதான வீதி, பசறை.

லோகாஸ் 21, 7வது லேன், மஸ்கேலியா.

டி. சந்திரசேகரன், 33, ராஜவீதி, மாத்தளை.

பி. வேலுசாமி லீலா ஸ்டோர்ஸ்,
53 பிரதான வீதி, நோர்வுட்.

தேவராஜ் மாஸ்டர், கலைவாணி ஸ்டோர்ஸ்,
பசுமலை பஜார், அக்கரபத்தனை.

கருணாநிதி. மே/பா பாலா.
புதிய பஸ் நிலையம், கலஹா.
ஜவார் ஸ்டோர்ஸ்
புப்புரஸ்ஸ ரோட், கலஹா.

வி. எம். இராமசாமி (குறிஞ்சி அறிவழகன்)
பரமேஸ்வராக் கல்லூரி, மடுல்கெல.

பிரதி வேண்டுவோர் கீழ்கண்ட
விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும்.

நிர்வாக ஆசிரியர்
"மாவலி"
618 3/3 காலி வீதி
கொழும்பு - 3

விலை சதம் -/50.

Published for the National Union of Workers, 618- 3/3 Galle Road Kollupitiya, Colombo, 3. and Printed at the Varuna Printers, Colombo 10
Managing Editor. C. V. Velupillai.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org